செய்தி வெளியீடு எண்: 158 நாள்: 23.02.2019

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 22.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் தருமபுரி, விழுப்புரம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 3 கோடியே 43 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதிக் கட்டடங்கள் மற்றும் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம், காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 7 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆய்வுக்கூடம் மற்றும் கூடுதல் வகுப்பறைகள், மாணவர், மாணவியர்களுக்கான கூடுதல் விடுதிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி வாகை சூடும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், சர்வதேச அளவில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தல், மாணவர்கள் தங்கி விளையாட்டில் பயிற்சி பெற விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்துதல், கிராமப்புற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாவட்ட விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், தருமபுரி மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தையொட்டியுள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 84 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் 84 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு விடுதிக் கட்டடங்கள்;

நாமக்கல் மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் 1 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம்;

காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழத்தில் 4 கோடியே 67 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிவியல் மையத்திற்கான ஆய்வுக்கூடம் மற்றும் கூடுதல் வகுப்பறைகள், 1 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர்களுக்கான விடுதியின் இரண்டாம் தள கட்டடம் மற்றும் 1 கோடியே 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியருக்கான விடுதியின் இரண்டாம் தள கட்டடம்;

என மொத்தம் 10 கோடியே 91 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதிகள், பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம், ஆய்வுக்கூடம், கூடுதல் வகுப்பறைகள், மாணவர், மாணவியர்களுக்கான கூடுதல் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ஷீலா ஸ்டிபன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9